# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1715 - 2011 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2011.07.15

*1715 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | 498 |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 496 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 496 | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2011, யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*2011 இன் இல. 336*

*1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணிகளை சம்பந்தப்பட்ட நீதி நிருவாகப் பிரிவுகளுக்கான சமாதான நீதவான்களாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்களாகவும் நியமிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2011, மே 30.

| தொடர் இல. | பெயர் | முகவரி | நீதி நிருவாக வலயம் |
|---|---|---|---|
| 1 | சட்டத்தரணி திரு. கித்சிறி பண்டார மனதுங்க | 506/4ஏ, கொஸ்வத்த வீதி, அக்கொன, அங்கொடை. | கொழும்பு |
| 2 | சட்டத்தரணி திரு. சமரகோன் முதியன்சேலாகே ஜாயானந்த சமரகோன் | இல. 180, நிலம்மஹர வீதி, மகரகம. | அவிசாவளை |
| 3 | சட்டத்தரணி திரு. கொழும்பகே குணரத்ன | இல. 254, ஜாயா மாவத்தை, தெதிகமுவ. | அவிசாவளை |
| 4 | சட்டத்தரணி திரு. வடுகெதர முதியன்சேலாகே பெர்ஸி லக்ஷ்மன் வடுகெதர | போவத்த, பிங்கிரிய | குளியாபிட்டி |
| 5 | சட்டத்தரணி திரு. இந்திரஜித் சுகித ஏக்கநாயக்க அமரசேகர | தொடகும்புரவத்த, அலவ்வ. | குருநாகல் |
| 6 | சட்டத்தரணி திருமதி ஜயசிங்க முதியன்சேலாகே பத்மா லாலனி ஜயவர்தன | எச்5/3, அன்டர்சன் மாடி வீடுகள், நாராஹேன்பிட்ட. | கொழும்பு |

7-294

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரிகள் கட்டளைச் சட்டம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் தெவுந்தறை ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் 2011 ஆம் ஆண்டின் வருடாந்த சமயக் கொண்டாட்டம் 2011, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 2011, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் என்பதை (175 அத்தியாயம்) யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்டு 1959 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 11959 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் அறியத்தருகிறேன்.

டபிள்யு. கே. கே. அத்துகோரள,
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,
மாத்தறை

மாத்தறை மாவட்ட செயலகம்,
2011, யூன் 20.

7-299

## பெரியகட்டு அந்தோனியார் ஆலய உற்சவம் - 2011

மேற்படி விழா 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி ஆரம்பமாகி ஓகத்து மாதம் 07 ஆம் திகதி முடிவடையும்.

1949.05.27 ஆந் திகதி 9978 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 1950.05.26 ஆந் திகதி 10105 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்வசத்தில் தீவிரமாக அமுல்படுத்தப்படும்.

பீ. எஸ். எம். சார்ள்ஸ்,
அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலாளரும்,
வுவுனியா.

கச்சேரி,
வவுனியா.
24.06.2011.

7-325

ச. வ. பீ. 277/40

## (188 ஆம் அத்தியாயம்) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்

19 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இந்த அறிவித்தலுக்கான அட்டவணையில்

குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் "பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக" வெளிப்படுத்தி மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னப்படுகின்றது எனத் தேசிய மரபுரிமை அமைச்சர் ஜகத்சிறி மானெல் பாலசூரிய ஆகிய நான் இத்தால் அறிவித்துக் கொடுக்கின்றேன்.

மேற்கூறப்பட்ட கட்டளை ஆக்குவதற்கெதிரான ஆட்சேபனைகள் 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும்/ஆட்சேபனைகள் எல்லாம் எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் எந்த ஏதுக்களின் மீது ஆட்சேபனை செய்யப்படுகின்றதோ/ ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றனவோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

கலாநிதி ஜகத்சிறி மானெல் பாலசூரிய,
தேசிய மரபுரிமை அமைச்சர்.

கொழும்பு,
2011, யூன்.28.

### அட்டவணை

### பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தப்படவேண்டிய நினைவுச் சின்னங்களின் நிரல்

**மத்திய மாகாணம் :**

1. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், ரத்தொட்ட பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இல. ஏ/ 376 வெலன்கஹவத்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, வெலன்கஹவத்த தம்மஜோத்யாராம விகாரையிலுள்ள போதனை மண்டபமும், டம்பிட்ட மேடையின் மேல் அமைந்துள்ள சிலை மண்டபமும்.

2. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் தொரமடலாவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, தொரமடலாவ ரஜமகா விகாரை பூமியிலுள்ள நீர் வடி வெட்டப்பட்ட குகை விகாரை, பாறைக் கல்லில் உள்ள படிக்கட்டுகள் இரண்டு வரிசை, மணித்தூண்.

3. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவின், கம்பொல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, கம்பொல நகரத்தின் கண்டி வீதியில் அமைந்த கதிரேசன் கோவில்,

4. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடுநுவர பிரதேச செயலகம், பிரிவின், தெகிபாகொட மேற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தெகிபாகொட அக்ரபோதி விகாரை பூமியிலுள்ள இரண்டு சிலை மண்டபங்கள், கோபுரம், இரண்டு மடிக்கட்டுகள், இரண்டு சந்திரவட்டக்கல்கள்.

5. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின், பம்பரகஹதெனிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்த சந்தசிரி துனுவில குகை விகாரை பூமியிலுள்ள குகை வதிவிட மனையும் இயற்கையான கற்குகையும்.

**மேல் மாகாணம்**

6. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவின், குருந்துவத்த கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கேம்பிரிஜ் பிலேஸ் இடத்திலுள்ள கிரெஸன்ட் கொடேஜ் என அறிமுகப்படுத்தும் வரிப்பணம் இலக்கம் 17 கொண்ட இடத்தில் அமைந்த பழைய வீடு.

7. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை செயலகப் பிரிவின், இரத்மலானை நகரத்தில் அமைந்துள்ள பார்வை அற்றோர் பாடசாலை பூமிக்கு சொந்தமான பழைமைவாய்ந்த இரண்டு மாடிக் கட்டடம்.

8. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில், கொழும்பு கோட்டை கிராம சேவகர் பிரிவின், கொழும்பு 01, யோக் வீதி, இல. 40 கொண்ட இடத்தில் அமைந்துள்ள கார்கில்ஸ் நிறுவனத்திற்கு சேர்மதியான கட்டடம்.

9. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவலை பிரதேச செயலகப் பிரிவின், இல. 732, மெடியமுல்ல கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பயாகல சுவர்ணாராம விகாரை பூமியிலுள்ள புராண சிலை மண்டபம்.

10. மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில் மீரிகம பிரதேச செயலகப் பிரிவின், இல. 336/ஏ, கெந்தலந்த கிராம சேவகர் பிரிவில் உள்ள தோரபிடிய எனும் கிராமத்தில் அமைந்த வெகெரஹேன என அறிமுகம் செய்யும் பூமியிலுள்ள கோபுர மேடு, கல் உடைக்கும் இடம், கற்படிக்கட்டுகளும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்து தடையங்கள் உள்ள குகை தொகுதியுமாகும்.

11. மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில் மீரிகம பிரதேச செயலகப் பிரிவின், இல. 4/ஏ, மாலதெனிய கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மாலதெனிய சயிலகாந்தாராம புரான விகாரை பூமியில் அமைந்துள்ள பாறைக் கல்வெட்டு, புரான கோபுர மேடு, படிக்கட்டுகள், குகை விகாரை, நீர் வடி வெட்டப்பட்டதும் கல்வெட்டுகளும் உள்ள குகை தொகுதி.

**சப்ரகமுவ மாகாணம்**

12. சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல பிரதேச செயலகப் பிரிவின் அம்புலுகல கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அம்புலுகல ஸ்ரீ தன்தபாய ரஜமகா விகாரை பூமியிலுள்ள தெமஹல் டம்பட்ட விகாரய (மேடை மேல் அமைத்த இரண்டு மாடி சிலை மண்டபம்)

13. சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலகப் பிரிவின், இல. 23பீ, கெப்பெடி பொல கிராம சேவகர் அமைந்துள்ள கெப்பெடிபொல டம்பிட விகாரை. (மேடையின் மேல் அமைந்த விகாரை).

14. சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில் அரநாயக பிரதேச செயலகப் பிரிவின் இல. 46, கொடிகமுவ கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இஹல கொடிகமுவ கல்லெனே வத்த (பன்சலே வத்த) என அறிமுகப்படுத்தும் பூமியிலுள்ள நீர் வடி வெட்டப்பட்ட குகை.

15. சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல பிரதேச செயலகப் பிரிவின், இலுக்கொட கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இலுக்கொட சயிலமஸ்தகாராம

விகாரை பூமியிலுள்ள புராதன சிலை மண்டபமும், போதனை மண்டபமும்.

**கிழக்கு மாகாணம்**

16. கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், பதவி ஸ்ரீ புர பிரதேச செயலகப் பிரிவின், இல. 31, எப் பழைய மதவாச்சி கிராம சேவைகர் பிரிவின் பழைய மதவாச்சி கிராமத்தில் ரங்மடுவ ரஜமகா விகாரை பூமியிலுள்ள சிலை மண்டபம் உற்பட்ட சிதைவுகள் தொகுதி.

17. கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், கடவத் சதர எனும் பிரதேச செயலகப் பிரிவில், 243பீ, கன்னியா கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கன்னியா கிராமத்திலுள்ள ஏழு வென்நீர் கிணறுகள் அதை அண்மித்துள்ள கோபுர மேடும் சிதைந்த கட்டடமும்.

18. கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவின் புல்மோடை கிராம சேவகர் பிரிவில் புல்மோடை கடற்கரையை அண்மித்த அசிரிமல மலை வரிசையில் அமைந்துள்ள தொல்பொருள் சிதைவுகள்.

**வடமேல் மாகாணம்**

19. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் பிரதேச செயலகப் பிரிவின் சிலாப நகர மத்தியில் அமைந்துள்ள, "சீகிரிய" என அறிமுகப்படுத்தும் வீடு அல்லது கொரயா வளவு.

20. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் பிரதேச செயலகப் பிரிவின், இல. 569ஊ, கிழக்கு மானுவன்கம கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள நொச்சிவடவன கிராமத்தில் தெதுரு ஒயா கரையிலுள்ள கோபுர மேடும் டெரகொட்டா மட்பாண்டங்கள் உள்ள தொல்பொருளியில் இடம்.

7-398

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(இரத்தினபுரி கிளை) - ஜகோடகே பாலித ரத்னபால மற்றும் கொஸ்வத்தகே அருணி ரேணுகா பிரசாந்தி ரட்னபால

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2011, சனவரி மாதம் 6 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"ஜகோடகே பாலித ரத்னபால மற்றும் கொஸ்வத்தகே அருணி ரேணுகா பிரசாந்தி ரட்னபால கடப்பாடுடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். கொஸ்கொடகேயினால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 2005, மார்ச் 09 ஆந் திகதியிடப்பட்ட 471 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, நவெம்பர் 23 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத்து மூன்று ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூபா 28,97,343.56) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 471 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 28,97,343.56 பணத்தொகையை 2010, நவெம்பர் 24 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட நுவரெலியாவில் உள்ள யூனிக் வியூ வீதியின் 88/1 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள யூனிக் வியூ எஸ்டேட் என அழைக்கப்படுவதும், தெரியப்படுவதுமான காணியுட னான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஈ. பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 19.02.2004 ஆந் திகதியிடப்பட்ட 1625ஏ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ரொரிங்டன் மைதானம்; கிழக்கு : காணித்துண்டு ஆர்14 மற்றும் வீதி ; தெற்கு : காணித்துண்டு கள் 22 மற்றும் 130 மற்றும் ரொரிங்டன் மைதானம் ; மேற்கு : ரொரிங்டன் மைதானம் மற்றும். அத்துடன் சொல்லப்பட்ட 1625ஏ ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், மூன்று றூட்ஸ் மற்றும் ஒன்பது தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 9.75பே.) விஸ்தீரணம் கொண்டது மான ஆதனம்.

அத்துடன், சொல்லப்பட்ட 471 ஆம் இலக்க அடகு முறியின் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள வீதிக்கான ஒதுக்கீடு மீதான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) / சபைச் செயலாளர்.

7-429/1

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(இரத்தினபுரி கிளை) - ஜாகொடகே பாலித ரத்னபால

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2011, சனவரி மாதம் 06 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"ஜாகொடகே பாலித ரத்னபால கடப்பாடுடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்தனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, திசெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட 1956 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, நவெம்பர் 23 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபத்தேழு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து ஐநூற்று எண்பத்திரண்டு ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 27,76,582.35) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1956 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 27,76,582.35 பணத்தொகையை 2010, நவெம்பர் 24 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டமும் மாநகர சபைக்கும் உட்பட்ட கொள்ளுப்பிட்டி பிரிவு இலக்கம் 37 இன் ஆர். ஏ. டி. மெல் மாவத்தை மற்றும் தர்மபால மாவத்தையின் "லிபேட்டி பிளாசா" என அழைக்கப்படும் கட்டடத்தின் 250/4/11 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பியினால் தயாரிக்கப்பட்ட 04.02.1993 ஆந் திகதியிடப்பட்ட 3878 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய நான்காம் தட்டில் உள்ள J411 ஒன்றியமாக விபரமாக விளக்கப்பட்டுள்ள கூட்டாதிக்க உரிமையுடனான குடியிருப்பின் எல்லைகள் - வடக்கு : இந்த ஒன்றியத்திற்கும் J 410 ஒன்றியத்திற்கும் இடையேயான சுவரின் நடுவு ; கிழக்கு : இந்த ஒன்றியம் மற்றும் CE 66B இன் திறந்த வெளி மற்றும் AU 03 இற்கு மேலாக திறந்த வெளிக்கு இடையிலான சுவரின் நடுவு ; தெற்கு : இந்த ஒன்றியத்திற்கும் CE 66B மற்றும் CE92 இன் திறந்த வெளியிற்கும் இடையே உள்ள சுவரின் நடுவு ; மேற்கு : இந்த ஒன்றியத்திற்கும் CE 92 மற்றும் CE 73 இன் திறந்த வெளிக்கும் இடையிலான சுவரின் நடுவு ; கீழே இந்த ஒன்றியத்தின் கொங்கிரீட் தளத்தின் நடுவு. ஒன்றியம் J311 இற்கு மேல் மேலே J511 ஒன்றியத்தின் கொங்கிரீட் தளத்தின் நடுவு அத்துடன், சொல்லப்பட்ட 3878 ஆம் இலக்க கூட்டாதிக்க உரிமை வரைபடத்திற்கு அமைவானதும், கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் Con A 38/59 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட நூற்று நாற்பத்தெட்டு தசம் ஏழு பூஜ்யம் சதுர மீட்டர்கள் (148.70 சதுர மீ.) என்பது ஆயிரத்து அறுநூறு சதுர அடி (1600 சதுர அடி) கொங்கிரீட் தள விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்.

அத்துடனான இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள பொதுப் பிரதேசத்தில் உள்ள 164 பிரிக்கப்படாத பங்கினையும் கொண்டது.

அத்துடன், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத் தம்பியினால் தயாரிக்கப்பட்ட 04.02.1993 ஆந் திகதியிடப்பட்ட சொல்லப்பட்ட 3898 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள CE92, ஒன்றியம் J41 இற்குச் செல்வதற்கான பொது வழியுடனான பிரசேத்தையும் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

7-429/2

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பிலியந்தலை கிளை) -ஜயசூரிய ஆராச்சிகே ரஞ்சித் பெரேரா மகந்த முதியான்சேலாகே ஷிரோமி நிலுபர் பிரேமச்சந்திர

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2011 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

"ஜயசூரிய ஆராச்சிகே ரஞ்சித் பெரேரா மற்றும் மகந்த முதியான்சேலாகே ஷிரோமி நிலுபர் பிரேமச்சந்திர கடப்பாடுடைய வர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், பிரசித்த நொத்தாரிசு பி. டி. ரி. தர்மதிலக்கவினால், அத்தாட்சிப்படுத்தப் பட்ட 2006, மே 04 ஆந் திகதியிடப்பட்ட 1522 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டி. ஏ. கே. அத்திக்காரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, ஒற்றோபர் 01 ஆந் திகதியிடப்பட்ட 933 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2011, பெப்புருவரி 14 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஐம்பத்துமூன்று இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது ரூபா அறுபது சதம் (ரூபா 53,95,589.60) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன்

நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1522 மற்றும் 933 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 53,95,589.60 பணத்தொகையை 2011, பெப்புருவரி 15 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவின் தெஹிவல-கல்கிசை மாநகர சபைக்கு உட்பட்ட ரத்மலானை தெற்கில் உள்ள ஸ்ரீ தர்மராம வீதியின் 74/12 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள மடங்ககஹாவத்த மற்றும் வெலபொடவத்த மறுபெயர் எலபொடவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஐ. ஐ. பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 25.01.1997 ஆந் திகதியிடப்பட்ட 1785ஏ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ16 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு : தந்தெனிய வலவ்வத்த மறுபெயர் வெரலபொட மஹாவத்த ; கிழக்கு : காணித்துண்டு ஏ17 ; தெற்கு : வீதி மற்றும் காணித்துண்டு ஏ9 ; மேற்கு : புகையிரத ஒதுக்கீடுகள். அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1785ஏ இற்கு அமைவானதும், கல்கிசை காணிப் பதிவகத்தில் எம் 2271/36 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0று. 8பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவின் தெஹிவல-கல்கிசை மாநகர சபைக்கு உட்பட்ட ரத்மலானை தெற்கில் உள்ள ஸ்ரீ தர்மராம வீதியின் 74/12ஏ வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள மடங்ககஹாவத்த மற்றும் வெலபொடவத்த மறுபெயர் எலபொடவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஐ. ஐ. பர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 25.01.1997 ஆந் திகதியிடப்பட்ட 1785பி ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ17 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு : தந்தெனிய வலவ்வத்த மறுபெயர் வெரலபொட மஹாவத்த ; கிழக்கு : காணித்துண்டு ஏ7 ; தெற்கு : வீதி ; மேற்கு : காணித்துண்டு ஏ16. அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1785பி இற்கு அமைவானதும். கல்கிசை காணிப் பதிவகத்தில் எம் 2271/37 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0று. 8பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். டபிள்யூ. பர்னாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 2399 ஆம் இலக்க வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ள 20 அடி அகலமான வீதி, சொல்லப்பட்ட 1522 மற்றும் 933 ஆம் இலக்க முறிகளில் மேலதிகமாக விபரிக்கப் பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

7-429/3

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கிருலப்பனை கிளை) - கறுநாகொட முதலிகே பியசேன மற்றும் இந்திராணி ரம்யலதா உடுவனகே

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2011, மார்ச் மாதம் 10 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"கறுநாகொட முதலிகே பியசேன மற்றும் இந்திராணி ரம்யலதா கடப்பாடுடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். டி. ஏ. கே. அத்திக்காரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, நவெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட 589 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2010, நவெம்பர் 24 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபத்தொரு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நூற்று இரண்டு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூபா 71,41,102.39) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 589 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 71,41,102.39 பணத்தொகையை 2010, நவெம்பர் 25 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டமும், மாநகர சபைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 44 இல் உள்ள கிருலப்பனை ஸ்ரீ சித்தார்த்த பசேஜ் இன் 33/4 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள

தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. டபிள்யூ. காவல்ஹோவினால் தயாரிக்கப்பட்ட 2001, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட் 2188 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7702 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 7530 மற்றும் காணித்துண்டு 7532 ; கிழக்கு : காணித்துண்டு 7703 ; தெற்கு : காணித்துண்டுகள் 7704 மற்றும் 7705 ; மேற்கு : காணித்துண்டுகள் 7767 மற்றும் 4059. அத்துடன் சொல்லப்பட்ட 2188 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் Kiri 159/229/230 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஐந்து தசம் மூன்று எட்டு (0ஏ. 0றூ. 5.38பே.) பேர்ச்சஸ்கள் விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டமும், மாநகர சபைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 44 இல் உள்ள கிருலப்பனையில் உள்ள ஸ்ரீ சித்தார்த்த பசேஜ் இன் 33/1 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. டபிள்யூ. காவல்ஹோவினால் தயாரிக்கப்பட்ட 2001, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட் 2188 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7705 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 7702 ; கிழக்கு : காணித்துண்டுகள் 7703 மற்றும் 7704 ; தெற்கு : காணித்துண்டுகள் 7704 மற்றும் 7706 ; மேற்கு : காணித்துண்டுகள் 7706 மற்றும் 4059. அத்துடன் சொல்லப்பட்ட 2188 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் Kiri 159/233 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இரண்டு தசம் ஒன்பது இரண்டு (0ஏ. 0றூ. 2.92பே.) பேர்ச்சஸ்கள் விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன், முன்சொல்லப்பட்ட முறி இலக்கம் 589 இன் இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவாக பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

7-429/4

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(நீர்கொழும்பு கிளை) - அகமட் ஜமால்டீன் மரிக்கார் மொகமட் அபூ யூசுப் பாத்திமா அஸ்வியா யூசுப் கன்னிப் பெயர் பரீட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2011, மே மாதம் 26 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

“அகமட் ஜமால்டீன் மரிக்கார் மொகமட் அபூ யூசுப் பாத்திமா அஸ்வியா யூசுப் கன்னிப் பெயர் பரீட் கடப்பாடுடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. எம். எம். பெர்னாண்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, பெப்புருவரி 08 ஆந் திகதியிடப்பட்ட 2325 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2011, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது அறுபத்தாறு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூற்று நாற்பத்தொரு ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 66,52,541.87) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 2325 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 66,52,541.87 பணத்தொகையை 2011, மாச்சு 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.”

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின், நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட கொஸ்கஹாவத்த, மடன்கஹாவத்த, நாவலதிய மறுபெயர் மடன்கஹாவத்த, பக்மிகஹாகும்புர மறுபெயர் பக்மீகஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எல். குறூஸ் தாபிரேராவினால் தயாரிக்கப்பட்ட 01.12.1964 ஆந் திகதியிடப்பட்ட 7241ஏ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5ஏ என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 1பி மற்றும் 5டி (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) ; கிழக்கு : காணித்துண்டு 5பி, மற்றும் ஜே. டி. ஜுலிஸ் அப்புஹாமியின் காணி; தெற்கு : காணித்துண்டு 5சி ; மேற்கு : புனித லாசரஸ் வீதி, அத்துடன் நீர்கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் ஏ245/10 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட முப்பத்து எட்டு தசம் மூன்று (0ஏ. 0றூ. 38.3பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், அண்மையில் நிலஅளவை செய்ப்பட்டதன் விபரம் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. பீ. விமலசேனவினால் தயாரிக்கப்பட்ட 08.12.2007 ஆந் திகதியிடப்பட்ட 6684 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவை, விபரங்கள் பின்வருமாறு :-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின், (நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது) நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட மஹாஹுனுபிற்றியவில் உள்ள புனித லாசரஸ் வீதியின்

வரிமதிப்பீட்டிலக்கம் 87 ஐக் கொண்ட கொஸ்கஹாவத்த, மடன்கஹாவத்த, நாவலதிய மறுபெயர் பக்மீகஹாகும்புர மறுபெயர் பக்மீகஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், சொல்லப்பட்ட 6684 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: 12 அடி அகலமான வீதி ; கிழக்கு : 7241ஏ ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 5பி, மற்றும் ஏ. சி. நிலாம் ரம்லனின் காணி; தெற்கு : பற்றிமா அஸ்வியாவின் காணி ; மேற்கு : புனித லாசரஸ் வீதி, அத்துடன் முப்பத்தாறு தசம் மூன்று பூஜ்யம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 36.30பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

**இரண்டாம் அட்டவணை**

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின், நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட மனஹுனுபிட்டியவில் உள்ள கொஸ்கஹாவத்த மடன்கஹாவத்த, நாவலதிய மறுபெயர் மதன்கஹாவத்த, பக்மிஹாகும்புர மறுபெயர் பக்மீஹாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எல். குறூஸ் தாபிரேராவினால் தயாரிக்கப்பட்ட 01.12.1964 ஆந் திகதியிடப்பட்ட 7241ஏ இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5டி (வீதிக்கான ஒதுக்கீடு) என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 1பி ; கிழக்கு : எல ; தெற்கு : காணித்துண்டுகள் 5ஏ மற்றும் 5பி ; மேற்கு : புனித லாசரஸ் வீதி, அத்துடன் நீர்கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் ஏ245/103 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட நான்கு தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 4.9பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின், நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட மனஹுனுபிட்டியவில் உள்ள கொஸ்கஹாவத்த மடன்கஹாவத்த, நாவலதிய மறுபெயர் மதன்கஹாவத்த, பக்மீகஹாகும்புர மறுபெயர் பக்மீகாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எல். குறூஸ் தாபிரேராவினால் தயாரிக்கப்பட்ட 01.12.1964 ஆந் திகதியிடப்பட்ட 7241ஏ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1பி (வீதிக்கான ஒதுக்கீடு) என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டுகள் 1ஏ ; கிழக்கு : எல ; தெற்கு : வீதிக்கான ஒதுக்கீடு (5 அடி அகலமானது) அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு 5டி ; மேற்கு : புனித லாசரஸ் வீதி, அத்துடன் நீர்கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் ஏ245/104 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட நான்கு தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 4.9பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

7-429/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.